ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 452) Oct (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஶ்ரீரங்கநாதோ ஜயது ஶ்ரீரங்கஶ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)......................................22

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)...26

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 270)

111. பவித்ரபாணிராதாய ம்ருத்கலா் மந்த்ரமந்த்ரிதாம்
தாம் த்ரிதா வாமஹஸ்தாக்ரே மூலமத்யாப்ரதோ ந்யஸேத்

பொருள் - பவித்ரமான கைகளால், மந்திரத்தால் தூய்மையாக்கப்பட்ட மண்ணைக் கொண்டு, அதனை இடது கையின் மூன்று பகுதிகளில் அடிப்பகுதி, நடுப்பகுதி மற்றும் முன்பகுதியில் பிரித்து வைக்கவேண்டும்.

112. போதசக்த்யாத்மநா பூர்வம் தீர்தசுத்திம் ஸமாசரேத்
தீர்தம் தத் த்ரிவிதம் ப்ரோக்தம் ஸ்தூலஸூக்ஷ்மபராத்மநா

பொருள் – ஞானத்தின் சக்தி ஸ்வரூபத்தை அடைவதற்கு முன், தீர்த்தத்தை தூய்மையாக்கவேண்டும். இந்த தீர்த்தம் மூன்று வகையாக கூறப்பட்டுள்ளது: ஒன்று ஸ்தூலமானது (தோற்றத்தில் தெளிவானது), இரண்டாவது ஸூக்ஷ்மமானது (அரிதாகக் காணப்படுவது), மூன்றாவது பரஸ்வரூபம் (அதிக உயர்ந்த அல்லது பரமதத்துவம்).

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 417)

6-7-8. ஒசிந்த நுண் இடை மேல் கையை வைத்து நொந்து நொந்து
கசிந்த நெஞ்சினளாய்க் கண்ண நீர் துளும்பச் செல்லும் கொல்
ஒசிந்த ஒண் மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே
கசிந்த நெஞ்சினளாய் எம்மை நீத்த எம் காரிகையே

பொருள் – வண்டால் துகைக்கப்பட்ட பூமாலை போன்று துவண்டவளும், மேன்மை கொண்டவளும் ஆகிய மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேச்வரனுடைய திருக்கோளூருக்கு, அன்பு நிறைந்த நெஞ்சம் கொண்டவளான எனது பெண்பிள்ளை, என்னை விட்டு அகன்று சென்று, முன்பே தளர்ந்துள்ள மென்மையான தனது இடை மீது, தனது களைப்பு காரணமாகத் தனது கரங்களை வைத்து, மேன்மேலும் வருந்தி, நெஞ்சத்தில் காதலைத் துணையாகக் கொண்டு, கண்களில் கண்ண்ணிர் நிறைந்தவளாக அங்கு சென்று சேர்ந்துவிடுவாளோ?

அவதாரிகை – "திருக்கோளூரில் ஸங்கத்தாலே என்னைப் பொகட்டுப்போன என் பெண்பிள்ளை, அஸ்ஸங்கமே துணையாகப் போய்ப் புகவல்லளேயோ?", என்கிறாள்.

விளக்கம் - “திருக்கோளூருக்குத் தனது அன்பினால், என்னையும் கூட விட்டுச் சென்ற எனது பெண்பிள்ளை, அத்தகைய அன்பு என்பதே தனது துணையாகக் கொண்டு அங்கு சென்று சேர்வாளோ?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (ஒசிந்தவித்யாதி) இவள் நடவாதேயிருந்தாலும், நினைத்தால் வயிறெரிய வேண்டும்படி கிடீர் இடையிருப்பது! (நுண்ணிடை மேல் கையை வைத்து) நடுவொன்றில்லையென்று அறிகிறிலள். தன் கையை வைக்கவும் பொறாதிறே தன்னிடைதான்; “மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்குமிடையாள்” என்று, அவன் கூடப் போகச் செய்தேயும் அஞ்சவேண்டும்படியான இடையிறே. ஒசிந்து - துவண்டு, நுண்ணிதாய் நேரிதான இடை. பல சொல்லியென்? நடுவொன்றில்லை என்கை. அதாவது – “இற்றது, முறிந்தது இப்போது, பின்னை" என்று பயப்பட வேண்டும்படியாயிருக்கை. (ஒசிந்த நுண்ணிடை மேல் கையை வைத்து) இப்படி விழுக்காடறியாதார் உண்டோ! நாயகன் கை வைக்கப் பொறுக்குமத்தனை போக்கித் தன் கை வைக்கப் பொறுக்குமோ? “தொடுங்காலொசியும் இடை”யிறே. அடியே பிடித்துக் கரோபத்ரவம் கனத்திறே யிருப்பது.

விளக்கம் - (ஒசிந்த இத்யாதி) - இவள் நடக்காமல் இருந்தாலும், நடக்கவேண்டும் என்று எண்ணினால் கூட, “இவளுக்கு என்ன ஆகுமோ” என்று சிந்திக்க வேண்டும்படியாக இவளுடைய இடை உள்ளது. (நுண்ணிடை மேல் கையை வைத்து) - நடுப்பகுதியான இடை என்பதை இவளும் கூட அறியாதபடி மெல்லியதாக உள்ளது. இவள் தனது கைகளை அங்கு வைக்கவும் கூட இயலாதபடி உள்ள இடையாகும். பெரியதிருமொழி (3-7-7) - மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்குமிடையாள் - என்பதாக, அவனுடன் இவள் சேர்ந்து சென்றால் கூட, அச்சம் கொள்ள வேண்டும்படியாக உள்ள இடை. ஒசிந்து என்றால் துவளுதல், நுண்ணியதாக உள்ள இடை. இவ்விதம் பலவற்றையும் ஏன் கூறவேண்டும்? இடை என ஒன்று இல்லை எனக் கூறலாம்படி உள்ளது. ஆனால் இடை என்பதே இல்லையோ என்பதற்கு விடையாக, “இற்றது, முறிந்தது இப்போது, பின்னை” என்று அச்சம் கொள்ளவேண்டியபடி உள்ளது. (ஒசிந்த நுண்ணிடை மேல் கையை வைத்து) - இப்படி உள்ளதை அறியாதவர்கள் உள்ளனரோ? நாயகன் கை வைத்தால் பொறுக்கும், ஆனால் இவள் தனது கையை வைத்தால் பொறுக்காது என்பதாக உள்ள இடையாகும். இவ்விதம் தனது

கையையே பொறாதபடி இடை இருக்குமோ என்பதற்கு விடை, திருவிருத்தம் (37) - தொடுங்காலொசியும் இடை - என்பதாக உள்ள இடை அல்லவோ? திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற - என்பது தொடங்கி இந்த நிலை உள்ளது.

வ்யாக்யானம் - (கையை வைத்து) மலைவைத்தென்னுமாபோலே. (நொந்து நொந்து) கை வாங்கமாட்டாள்; நோவாதிருக்கமாட்டாள். ஸஹஜ சத்ருக்களோடே கூடி ஜீவித்துக் கிடக்கலாம்; வந்தேறிகள் கீழ் பிழைக்கவொண்ணாதிறே! (நொந்து நொந்து) மிகவும் நொந்து; முதலிலே அலாபத்திலே நிலையான இடையிலே ஸ்தந பாரங் கொண்டு ஆற்றவொண்ணாதிருக்க, வந்தேறியான கைகொண்டு பொறுக்கவொண்ணுமோ? (கசிந்த நெஞ்சினளாய்) இடையினுடைய நொய்ம்மை சொல்ல, நெஞ்சோதான் சாலப் பருத்திருக்கிறது? நெஞ்சில் ஈரமிருக்கிறபடி.

விளக்கம் – (கையை வைத்து) - இவள் தனது கைகளை எடுத்து இடையில் வைத்தபோது, மலையை எடுத்தது போன்று தளர்ந்தாள். (நொந்து நொந்து) - இந்த முயற்சியிலிருந்து பின் வாங்கமாட்டாள்; இதன் விளைவாகத் துன்பம் அடையாமலும் இருக்கமாட்டாள். நமக்குப் பழக்கமான பகைவர்களுடன் சேர்ந்து இருக்க இயலும்; ஆனால் வந்து சேர்ந்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அறியாமல் அவர்களுடன் சேர்ந்து நின்று பிழைக்க இயலாது; இதனை அடுத்து விளக்குகிறார். (நொந்து நொந்து) - மிகவும் தளர்ந்து. முதலிலிலேயே “இல்லை” என்பதாக உள்ள இடையில், ஸ்தனங்களுடைய பாரம் பொறுத்துக் கொள்ள இயலாதபடி உள்ளபோது, வந்து சேர்ந்ததான கையின் பாரத்தையும் சுமக்க இயலுமோ? (கசிந்த நெஞ்சினளாய்) - இடைப்பகுதியின் நுட்பம் கூறும்போது, நெஞ்சம் மிகவும் பருமனாக உள்ளது. அதாவது நெஞ்சத்தில் ஈரம் மிகுதியாக உள்ளது.

வ்யாக்யானம் - (கண்ணநீர் துளும்ப) இது தனக்கும் ஊற்றிறே அது. (செல்லுங்கொல்) இனி ஸர்வதா மீளாளிறே. வழியில் மிறுக்குக்கள் கழித்துப் புகவல்லளோ? (ஒசிந்த இத்யாதி) பிரிந்தார் துவட்சி சொல்லுகைக்குக் கலந்தாரோ தான் துவளாதேயிருக்கிறார்? வண்டாலே ஆத்த ஸாரமாயிருக்கிற பூப்போலேகாணும் நித்ய லம்ச்லேஷத்தாலே துவண்டிருக்கும்படி. ஒண்மலராள் கொழுநன் உண்டு, அவளுடைய வல்லபன்; அவனுடைய திருக்கோளூர்க்கே. (கசிந்த நெஞ்சினளாய்) ஸஸ்நேஹமான மநஸ்ஸையுடையளாய். பற்றுகைக்கு

அவ்வூரேயாகவமையும், விடுகைக்குத் தாயாகவமையும். (ஒண்மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே கசிந்த நெஞ்சினளாய்) அவனுடைய ப்ரணயித்வத்திலே அகப்பட்டவள் இனி மீளப் புகுகிறாளோ? ஒண்மலராள் கொழுநன் என்று அவனுக்கு ஏற்றம் இருக்கிறபடி. "திருமகளார் தனிக்கேள்வனென்னும் பெருமையுடைய பிரானார்".

விளக்கம் – (கண்ணநீர் துளும்ப) - மனதிற்கும் ஊற்றாக உள்ளது கண்ணீர் அல்லவோ? (செல்லுங்கொல்) - இவன் இங்கு திரும்பவேண்டும் என்பதே எண்ணமாக உள்ளபோது "செல்லும்கொல்" என்பது ஏன்? காரணம், இவள் இனி எந்தவிதத்திலும் திரும்பப் போவதில்லை என்பதால் ஆகும். செல்லும் வழியில் தனது உறுதி குலைந்து மீண்டும் வர இயலுமோ? (ஒசித்த இத்யாதி) - பிரிந்தவர்களுடைய துவட்சி கூறுவதற்கு, முன்பு கலந்தவர் துவளாமல் உள்ளாரோ? வண்டால் எடுக்கப்பட்ட ஸாரம் இழந்த மலர் போன்று, நித்யமாக உள்ள சேர்க்கையால் துவண்டபடி உள்ளாள் மஹாலக்ஷ்மி; அவளுடைய நாதன் உள்ளான்; அவனுடைய திருக்கோளூருக்குச் சென்றாள். (கசிந்த நெஞ்சினளாய்) – தான் பற்றிக் கொள்ள அந்த ஊரே ஏற்றது, விடுவதற்குத் தாயே ஏற்றவள் என்று உள்ளாள். இவ்விதம் காதலுடன் கூடிய மனம் கொண்டவளாக. (ஒண்மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே கசிந்த நெஞ்சினளாய்) - அவனுடைய காதலில் வசப்பட்டாள்; இனி திரும்பப் போகிறாளோ? "ஒண் மலராள் கொழுநன்" என்று அவளை முன்னிறுத்தி இவன் கூறப்படும்படியாக இவனுக்கு ஒரு ஏற்றம் உள்ளது. இவளுடைய நாதனாக உள்ளதில் அவனுக்கு ஏற்றம் உள்ளதோ என்பதற்கு ப்ரமாணம் திருவாய்மொழி (1-6-9) - திருமகளார் தனிக்கேள்வனென்னும் பெருமையுடைய பிரானார் - என்பதாகும்.

வ்யாக்யானம் - (எம்மை நீத்தவெங்காரிகையே) அவளுக்கு இங்குள்ள மமகாரங் கழியக் கழிய, அதுதானே ஹேதுவாகாநின்றது திருத்தாயாருக்குப் பற்றுகைக்கு. பகவத் விஷயத்திலே அவகாஹிக்கையும், வ்யதிரிக்தங்களை விடுகைக்கெல்லை இவ்வளவாகையும், இப்படி விட்டால் பின்பு அவர்கள் தாங்களே உத்தேச்ய ரென்னுமிடமுஞ் சொல்லுகிறது. புறம்புள்ளவற்றை விடப் பண்ணுவித்துக் கொண்ட விஷயத்தில் ஜ்ஞாந லாபமிறே இவளுக்கு வேண்டுவது! இவள் ஸம்பந்தமேயிறே திருத்தாயாருக்கு வேண்டுவது! (கசிந்த நெஞ்சினளாய் எம்மை நீத்த வெங்காரிகை - ஒசிந்த ஒண் மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே – கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணீர் துளும்பச் செல்லுங் கொல்) இவள் என்னை விடும்படி

பண்ணிக் கொண்ட விஷயத்தில் ப்ராவண்யமானது அவ்வூரில் ப்ரவேசத்தையும் பண்ணிக்கொடுக்கவற்றோ? “எம்மை நீத்த” என்று நிச்சயித்தாள்; “செல்லுங்கொல்” என்று ஸம்சயியா நின்றாள்; ப்ரேமம் இரண்டையும் பண்ணிக் கொடுக்குமிறே: பாரவச்யத்தை விளைத்து இடையிலே பொகடிலும் பொகடும்; அன்றிக்கே, கொண்டு போய்ப் பொகடிலும் பொகடுமிறே.

விளக்கம் – (எம்மை நீத்தவெங்காரிகையே) - நீத்த என்றால் “விட்ட” என்று பொருள். அவள் இந்தத் தாயாரை விட்டுச் செல்ல, இவள் அந்தப் பெண்பிள்ளையை “என்னுடையவள்” என்று கூறுவது இயலுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். இவளுக்கு இங்கு உள்ளபோது ஏற்பட்ட மமகாரம் போன்றவை கழிந்தபடி இருந்தன. இதுவே, திருத்தாயார் அவளை மேலும் பற்றுவதற்குக் காரணமாயின. பகவத் விஷயத்தில் நன்கு மூழ்குதல் மற்றும் அதனைத் தவிர உள்ள மற்ற பொருள்களை விடுதல் என்பதற்கு எல்லை இப்படியாகவே உள்ளது; இவ்விதம் விட்ட பின்னர் அவர்கள் தாங்களே விடப்பட்டவர்களுக்கு இலக்கு என்று கூறுகிறார். “விடப்பட்டவர்களுக்கு விட்டவர்களே ஏற்றவர்கள் என்று கூறினீர்கள். அவர்களுக்கு பகவத் ஞானம் ஏற்படவேண்டாமோ?” என்பதற்குப் பதில் கூறுகிறார். தாயாருக்கு அவளுடைய ஸம்பந்தமே வேண்டியதாகும் என்கிறார்; மற்ற விஷயங்கள் அனைத்தும் வரும்படிச் செய்து, தன்னிடம் ஏற்றுக் கொண்ட விஷயத்தில் ஞானம் எற்படுவது அல்லவோ அவளுக்கு வேண்டியதாகிறது! (கசிந்த நெஞ்சினளாய் எம்மை நீத்த வெங்காரிகை - ஒசிந்த ஒண் மலராள் கொழுநன் திருக்கோளூர்க்கே – கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணீர் துளும்பச் செல்லுங் கொல்) - இங்கு “கசிந்த” என்பது இரண்டு முறை வந்துள்ளதற்கான காரணத்தைக் கூறுகிறார். அதாவது தாயாரை விட்டு சென்றதற்கு ஒரு கசிவும், திருக்கோளூருக்குச் செல்வதற்கு ஒரு கசிவும் என்று கொள்ளவேண்டும். இவள் என்னை விட்டு அகலும்படிச் செய்த விஷயத்தில் உள்ள ஈடுபாடானது அந்த ஊரில் புகுவதையும் உண்டாக்கித் தரும். “என்னை விட்டு அகன்றாள்” என்று உறுதியாகக் கூறினாள்; ஆனால் அங்கு “செல்வாளோ” என்று ஏன் சந்தேகம் கொள்ளவேண்டும்? இதன் காரணம், காதலானது இரண்டையும் செய்யும் அல்லவோ! இரண்டு என்பது எவை என்றால் பரவசம் உண்டாகும் தன்மையை உண்டாக்கி, அதனை இடையிலேயே தகர்த்துவிடும்; அல்லது கொண்டு சேர்த்தாலும் சேர்க்கும்.

6-7-9. காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கு என்று
ஈரியாய் இருப்பாள் இது எல்லாம் கிடக்க இனிப் போய்
சேரி பல் பழி தூய் இரைப்பத் திருக்கோளூர்க்கே
நேரிழை நடந்தாள் எம்மை ஒன்றும் நினைந்திலளே

பொருள் – மென்மையான இடையைக் கொண்ட எனது மகள், சிறந்த பொருள்களை நோக்கும்போது, “இவை எனது க்ருஷ்ணனுக்கு” என்று இருப்பாள். இப்படியாக அனைத்தும் அவனுடையது என்று இவள் எண்ணுகின்ற இந்த அனைத்தும் இங்கு உள்ளபோது, இவள் அனைத்தையும் விட்டவளாக, இந்தச் சேரியில் உள்ளவர்கள் பலவிதமாகப் பழி கூறும்படியாக, திருக்கோளூக்கு நடந்து சென்றாள்; என்னைக் குறித்து இவள் சிறிதும் எண்ணவில்லை.

அவதாரிகை – அவன் பக்கலிலே அத்யந்த ப்ரவணையாயிருக்கிற இவள், சேரியிலுள்ளார் சொல்லும் பழியே பாதேயமாகத் திருக்கோளூர்க்கே போனாளென்கிறாள்.

விளக்கம் - “அவன் விஷயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள இவள், இந்தச் சேரியில் உள்ளவர்கள் கூறும் பழிச்சொற்கள் அனைத்தையும் நன்மை என்பதாகவே கொண்டு, திருக்கோளூர் சென்றாள்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (காரியம் நல்லனகள் அவை காணில்) முதலிலே காண்பதில்லை; பதார்த்தங்களில் நல்லது காணில், தன்னை எனக்காக ஒக்கி வைத்த க்ருஷ்ணனுக்கு என்னப்புக்கு அந்த ப்ரஸ்தாவத்திலே நெஞ்சு நெகிழா, பின்பு அதுதானும் மாட்டாதேயிருக்கும். “த்ருஷ்ட்வா பலம் வா புஷ்பம் வா” என்று அவன் சொல்லுமவையெல்லாம் இவள் சொல்லுகிறபடி. நல்லது கண்டால், “அவனுக்கு” என்று இருக்குமதுக்குமேலே அவ்வருகேயொன்று தேடிப் போனாளே! இவளுக்காகத் திருக்கோளூரிலே வந்து, தன்னை இவளுக்கோக்கி வைத்தபடி.

விளக்கம் – (காரியம் நல்லனகள் அவை காணில்) – முதலில், எதனையும் காணமாட்டாள். அவ்விதம் காணும்போது, அவற்றில் நல்ல பொருள்களைக் காண

நேர்ந்தால், "இவை எனக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட க்ருஷ்ணனுக்கே ஆகும்", என்று எண்ணியபடி, அந்த நிலையில் நீடித்து, நெஞ்சம் நெகிழ்ந்து, பின்பு தானும் அதனை ஏற்காமல் இருப்பாள். ஸுந்தரகாண்டம் (36-45) - த்ருஷ்ட்வா பலம் வா புஷ்பம் வா - பழத்தையாவது மலரையாவது கண்டால், ஸீதை என்பதாக உம்மையே எண்ணிப் பேசுகிறார் – என்பது போன்று இவளும் உள்ளாள். நல்லவற்றைக் கண்டால், "அவனுக்கு" என்று எண்ணியபடி மட்டும் இருந்தவள், அதனையும் கடந்து, அந்த நல்லவற்றைத் தேடிச் சென்றாள். இவள் "என் கண்ணன்" என்று கூறுவதற்கு ஏற்றபடி அவன் செய்த உபகாரம் என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; இவளுக்காக அவன் திருக்கோளூருக்கு வந்து, தன்னை இவளுக்கே என்று வைத்துக் கொண்டான் என்பதே ஆகும்.

வ்யாக்யானம் - (இதெல்லாங் கிடக்க) "ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய" என்னுமாபோலே. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றும், "ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றக் கற்புவானிடறி"யும், "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழு"ந்தும், "காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கு என்று ஈரியாயிருக்கும் இதெல்லாங் கிடக்க" – இந்த நிரவதிக ஸம்பத்துக் கிடக்க. (இனிப் போய்) "தனக்கு" என்கிற ப்ரதிபத்தி மாத்திரத்திலே உண்டறுக்க மாட்டாதவனுக்கு ஒன்று கொடுத்துக் குறை தீரப் போனாளே. "தே பூயிஷ்ட்டாம்" என்றிறே அவனிருப்பது. அவன்படியை நினைத்தால், இவளுக்கு இங்கேயிருக்க அமையாதே?

விளக்கம் - (இதெல்லாங் கிடக்க) - இங்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். ஸுந்தரகாண்டம் (16-19) – ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய - அனைத்து இன்பங்களையும் துறந்து - என்பதற்கு ஏற்ப இவள் செய்கிறாள் என்பது முதல் பொருள் ஆகும். அடுத்து இரண்டாவது பொருள் கூறுகிறார்; "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்றும், "ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்றக் கற்புவானிடறி" என்றும், "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழு" என்றும், "காரியம் நல்லனகள் அவை காணில் என் கண்ணனுக்கு என்று ஈரியாயிருக்கும் இதெல்லாங் கிடக்க" என்றும் உள்ள அனைத்தையும் விட்டு; அதாவது அளவற்ற இந்த ஸம்பத்துக்கள்

உள்ளபோது. (இனிப் போய்) - நல்ல பொருள்களைக் கண்டால், க்ருஷ்ணனுக்கு என்று இருந்தால் மட்டும் போதுமானதா? அவனுக்கு அவற்றை அளிக்கவேண்டாமா என்பதற்கு விடை அளிக்கிறார்; அனைத்தையும் அளித்த பின்னர், "இவளுக்கு நாம் ஏது அளிக்கவில்லையே" என்றுள்ள குறையால் நிறைவுடன் உள்ள அவனுக்கு, ஒன்று அளித்து குறை தீரும்படிச் செய்வதற்காகச் சென்றாள். இவ்விதம் அவன் எண்ணம் உள்ளது என்பதற்கு ப்ரமாணம், யஜுர் வேதம் – தே பூயிஷ்டாம் - உனக்காக நாங்கள் அதிகமாக "நம:" என்று கூறுகிறோம் – என்று அல்லவோ அவன் உள்ளான்? சரி, அவனுடைய விதம் இப்படி உள்ளபோது, இவளுக்கு இங்கு இருக்க அமையாதோ?

வ்யாக்யானம் - (சேரி பல் பழி தூஉயிரைப்ப) பொகடும் வழித்துணை பெற்றவாறே போனாளத்தனை. ஒருவர் இருவரன்றே! இனியொருவர் சொல்லிற்றொருவர் சொல்லார்களிறே. (பல் பழி தூஉயிரைப்ப) தன்னை அவனுக்கு ஆக்கி வைத்தாள்; பின்னையது தானும் மாட்டிற்றிலள்; புறப்பட்டுப் போனாள்; தாயைப் பார்த்திலள்; ஊரார் பழி பார்த்திலள்; இத்தனையும் செய்தால் அவன்தான் எதிரே வரப் பெற்றதில்லை என்று இப்புடைகளிலே ஒரு கோடியிறே சொல்லுவது. "அலரெழிலாருயிர் நிற்கும்" என்று வழிக்கு தாரகமாமிறே.

விளக்கம் – (சேரி பல் பழி தூஉயிரைப்ப) - பழியையே தனது வழித்துணையாகக் கொண்டு சென்றாள். அதாவது இவள் அவனை "மறப்பேன்" என்று எண்ணிய அந்த நேரத்தில் கூட, அவனை மறக்க இயலாமல் இருந்ததற்கு ஊரார் கூறும் இத்தகைய பழிச்சொற்களே காரணமாக அமைந்ததால், பழி கூறுதல் என்பது இவளுக்கு வழித்துணையாகச் செல்வதற்கான காரணமாக அமைந்தது. இவ்விதம் தன்னை கொண்டு சென்று அங்கு விடுவதற்கு வழித்துணை கிடைத்தவுடன், இவள் புறப்பட்டுச் சென்றாள். ஒரு ஊராக சேர்ந்து நின்று பழி கூறியது. ஒருவர் கூறியபோது, வேறு ஒருவர் கூறாமல் இருக்கவில்லை; அனைவரும் கூறினர். (பல் பழி தூய் இரைப்ப) - தன்னை அவனுக்கு என்று ஆக்கிக்கொண்டாள்; பின்னர் இவள் அந்தத் தன்மையை மாற்றவில்லை; புறப்பட்டுச் சென்றாள்; தாயை இவள் எண்ணவில்லை; ஊராருடைய பழிக்கு அஞ்சிப் பார்க்கவில்லை; இத்தனையும் செய்த பின்னர் அவன் வரவில்லை என்பதை இந்த ஊரார் நோக்கி, பலவும் கூறியபடி இருப்பர். ஆனால் பழியானது வழித்துணையாக இருக்குமோ

என்பதற்கான ப்ரமாணம், திருக்குறள் (1141) – அலரெழிலாருயிர் நிற்கும் - என்பதற்கு ஏற்ப வழித்துணையே ஆகும்.

வ்யாக்யானம் - (நேரிழை நடந்தாள்) கடைப்பணிக் கூட்டங் கண்டு கொண்டு பின்னே போகவாகாதேதான் இவள் ஆசைப்படுகிறது. (நடந்தாள்) தன் பெண் பிள்ளையே யாகிலும், "திருக்கோளூரிலே போக" என்று நாலடி புறப்பட்ட இவளை இங்ஙனல்லது சொல்லவொண்ணாதிறே. தன் மகளையெங்ஙனே கனக்க நினைத்திருக்கிறாள்தான்! வயிற்றிற் பிறக்கவுமாம், சிஷ்யர்களாகவுமாம்: பகவத் விஷயத்தில் ப்ரத்யாஸந்நர் உத்தேச்யராமத்தனை.

விளக்கம் – (நேரிழை நடந்தாள்) – "நேரிழை" என்றால் கொண்டாடத்தக்க ஆபரணத்தை அணிந்தவள் என்று கருத்து. "நேரிழை" என்று ஆபரணத்தை ஏன் வர்ணிக்கவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார். ஆபரணங்களுடைய நுனியானது கூடிய இடத்தை, அதாவது கொக்குவாய் போன்று ஆபரணங்களை இணைத்துள்ள பிடரிப்பகுதியில் பின்னே செல்வதற்கு அல்லவோ இவள் விரும்புகிறாள். (நடந்தாள்) – தனது பெண்பிள்ளையை "போனாள்" என்று கூறாமல் "நடந்தாள்" என்று கௌரவித்துக் கூறுவது ஏன்? தனது பெண்பிள்ளை என்றாலும், "திருக்கோளூர் போக" என்பதற்கு நான்கு அடி புறப்பட்ட பின் இவள் இவ்விதம் கௌரவத்துடன் கூறுவது அல்லாமல், "போனால்" என்று கூற இயலாது. வயிற்றில் பிறந்தாலும் சரி, சிஷ்யர்களாக இருந்தாலும் சரி, இவ்விதம் எண்ணவேண்டும். காரணம், பகவத் விஷயத்தில் ஸம்பந்தம் கொண்டவர்கள், ஏற்றவர்களே ஆவர்.

வ்யாக்யானம் - ஒருநாள் நம்பிள்ளையை, சீயர், கோஷ்டியிலே வைத்துப் போரக் கொண்டாடியருளி, "'தன் சிஷ்யனைத்தான் கொண்டாடா நின்றான்' என்றிராதே கிடிகோள்! 'கணபுரங் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே' என்று பண்டு சொன்னாரும் உண்டு கிடிகோள்" என்றருளிச் செய்தார். அம்மணியாழ்வான், தன் சிஷ்யனைத்தான் தண்டனிடா நிற்குமாம்; "இதுவென்?" என்று கேட்க, "அல்லாத வைஷ்ணவர்களை வ்ருத்தத்தாலே அறியவேணும்; இவர்கள் நானறிய வைஷ்ணவர்கள் என்று ஆதரிப்பன்" என்றான்.

விளக்கம் – பகவத் ஸம்பந்தம் கொண்டுள்ள காரணமாக, சிஷ்யர்களை ஏற்றவர்களாகக் கொள்வதற்கு இரண்டு நிகழ்வுகள் காண்கிறார். இதனை "ஒருநாள்" மற்றும் "அம்மணி" என்று தொடங்கும் வாக்கியங்களால் கூறுகிறார். ஒருநாள் நம்பிள்ளையை நஞ்சீயர் கோஷ்டியில் வைத்து மிகவும் கொண்டாடினார். தொடர்ந்து, "இவர் தனது சிஷ்யனாக உள்ளதால் இவ்விதம் கொண்டாடுகிறார் என்று எண்ணவேண்டாம். பெரியதிருமொழி (8-2-9) – கணபுரங் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே - என்று முன்பு இது போன்று கொண்டாடியவர்கள் உள்ளனர்", என்றார். அம்மணியாழ்வான் தனது சிஷ்யனைத் தான் வணங்கி நிற்பார்; "இது ஏன்?" என்று சிலர் கேட்டார்கள்; இதற்கு அவர் "மற்றவர்களை, 'இவர்கள் வைஷ்ணவர்கள்' என்று அவர்களுடைய ஒழுக்கத்தால் மட்டுமே அறிய இயலும். ஆனால் இந்தச் சிஷ்யர்கள் நம்மால் திருத்தப்பட்டு கொள்ளப்பட்டவர்கள் என்பதால், இவர்கள் வைஷ்ணவர்கள் ஆகிறார்கள்", என்றார்.

வ்யாக்யானம் - (எம்மையொன்றும் நினைத்திலளே) வழிக்குத் துணையாகத்தான் கொடுபோகாவிட்டால், ஸ்மரிக்கத்தானாகாதோ? (ஒன்றும் நினைத்திலளே) எதிர்கொள்வாரிலே சிலராகவாதல், வழித்துணையாவாரிலே சிலராகவாதல், ஏதேனும் ஓராகாரத்தாலேதான் நினைக்கலாகாதோ? "அத்தலையில் நினைவே கார்யகரமாவது" என்றிருக்கிறாள். பகவதாஸத்தியுடையாருடைய அபிமாநமே உத்தேச்யம்.

விளக்கம் - (எம்மையொன்றும் நினைத்திலளே) – என்னைத் தன் வழித்துணையாக அழைத்துச் செல்லவில்லை என்றாலும், நினைக்கவாவது செய்யலாம் அல்லவோ? (ஒன்றும் நினைத்திலளே) - அவள் செல்லும்போது எதிரில் வருபவர்கள், இவளை நோக்கிப் பழி கூறுபவர்கள் என்று எண்ணுவது போன்றோ, அல்லது இவர்கள் நம்முடைய வழித்துணை ஆவார்கள் என்று எண்ணுவது போன்றோ, ஏதேனும் ஒரு விஷயத்திலாவது என்னை அவள் நினைக்கலாம் அல்லவோ? இவள் நினைத்தால் என்ன பயன் என்று கூறுகிறாள். "இவள் என்னை நினைத்தால் கார்யம் ஏற்படும் நிலை ஆகும்" என்று உள்ளாள். ஏனெனில் பகவத் ஸம்பந்தம் உள்ளவர்களுடைய "இவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள்" என்ற எண்ணமே ஏற்றதாகும்.

6-7-10. நினைக்கிலேன் தெய்வங்காள் நெடும் கண் இளமான் இனிப் போய்
அனைத்து உலகும் உடைய அரவிந்தலோசனனைத்
தினைத்தனையும் விடாள் அவன் சேர் திருக்கோளூர்க்கே
மனைக்கு வான் பழியும் நினையாள் செல்ல வைத்தனளே

பொருள் – தெய்வங்களே! எனது மகளுடைய செயல்களையும் தன்மைகளையும் என்னால் நினைக்க இயலவில்லை. அவனுடைய பெருமை அனைத்தையும் தனது உள்ளே வைத்துள்ளதை வெளிப்படுத்தும் பெரிய கண்கள் கொண்டவளாகவும், இவளுடைய வயதை ஆராய்ந்தால், இளமையுடன் கூடிய மான் போன்றவளாகவும் உள்ள இவள், தனது கண்ணழகு தன்னிடம் இருந்தபோதிலும், அனைத்து லோகத்திற்கும் எஜமானனாக இருக்கும் தகுதியான அரவிந்தலோசநனை ஒருபோதும் விடாதவளாக, அவன் எப்போதும் வசிக்கும் திருக்கோளூருக்குச் சென்றாள்.

அவதாரிகை – இக்குடிக்கு வரும் பெரும் பழியை நினையாதே, திருக்கோளூரிலே புக்கு அவனையொருகாலும் விடுகிறிலளென்கிறாள்.

விளக்கம் - “இந்தக் குடிக்கு ஏற்படக்கூடிய பெரும்பழியைக் குறித்துச் சிறிதும் எண்ணாமல், திருக்கோளூரில் புகுந்தவளாக, அவனை ஒருபோதும் விடாமல் உள்ளாள்”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (நினைக்கிலேன்) கடலைக் கரை காணவொண்ணாதிறே. தன்னைப் பொகட்டுப் போனபடி, வழியில் மிறுக்குக்கள், அங்குப் புக்கால் இவள் படும்பாடுகள் அநேகங்களிறே. (தெய்வங்காள்) இத்தை, “கொல்லை” என்பார் முகம் பார்த்துச் சொல்லவொண்ணாதே. பழி சொல்லாமையையும், சிறையுறவுபோலே தன்னோடொக்க உறங்காமையையும் பார்த்துச் சொல்லுகிறாள். (தெய்வங்காள் - நினைக்கிலேன்) செயலற்றுக் கைவாங்கிச் சொல்லுகிற வார்த்தையிறே.

விளக்கம் - (நினைக்கிலேன்) – இவளைக் குறித்து எண்ண இயலாமல் உள்ளதன் காரணமாக, இவளுடைய தன்மைகள் அளவிட இயலவில்லை என்கிறாள். ஸமுத்திரமானது கரை காண இயலாதபடி உள்ளது அல்லவோ? ஆனால், எல்லை

காண இயலாதபடி உள்ளதாக, இவளுடைய செயல்கள் ஸமுத்திரம் போன்று அளவிட இயலாததோ என்பதற்கு விடை அளிக்கிறார்; தன்னை விட்டுச் சென்று, போகும் வழியில் ஏற்படக்கூடிய துன்பங்கள் மற்றும் அங்கு சென்ற பின்னர் இவள் படும்பாடுகள் போன்ற பலவும் அனேகம் என்பதால் ஆகும். (தெய்வங்காள்) - மற்ற தேவதைகளை வணக்காமல் உள்ள இந்தத் தாயானவள், “தெய்வங்காள்” என்று அவற்றை நோக்கிக் கூறும் காரணம் என்ன என்பதற்கு விடை கூறுகிறார். இதனை “கொல்லை” என்று கூறுபவர்கள், முகம் பார்த்துக் கூற இயலாது அல்லவோ? மற்ற தெய்வங்கள், இவளைக் குறித்து ஊரார் போன்று பழி கூறாமல் உள்ளதையும், சிறைப்பட்டது போன்று தன்னுடன் சேர்ந்து உறங்காமல் உள்ளதையும் நோக்கி, அவற்றிடம் கூறுகிறாள். (தெய்வங்காள் - நினைக்கிலேன்) - வேறு கதி இல்லாத காரணத்தால், செயலற்று, கைவிட்டு இவ்விதம் கூறுகிறாள் எனலாம்.

வ்யாக்யானம் - (நெடுங் கணிளமான் இனிப் போய்) விழுக்காடறியாமையாலே புறப்பட்டுப் போனாள் அத்தனைகிடீர்! இக்கண்ணுக்கு இலக்கானவர்கள், ஸர்ப்ப யாகத்தில் ஸர்ப்பங்கள் சுருண்டு வந்து விழுமாபோலே தந்தாம் முதன்மையோடே வந்து விழவேணுங்கிடீர்! (இனிப் போய்) ஆர் செய்யக் கடவத்தை யார்தான் செய்கிறார்? கண்படைப்பாளும் தானாய்ப் புறப்பட்டுப் போவாளுந் தானாவதே! இத்தலை ப்ரவர்த்தியாமைக்கு ஸ்வரூபமேயமையுமாகாதே.

விளக்கம் - (நெடுங் கணிளமான் இனிப் போய்) - அங்கு சென்றால் உள்ள நிலைமையைக் குறித்து முன்பே ஆராயாமல் சென்றாள். “நெடுங்கண்” என்றால், இந்தக் கண்களுக்கு இலக்கானவர்கள், ஜநமேஜயன் செய்த ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் வந்து சுருண்டு விழுவது போன்று, அப்படியே ஓடி வந்து நிற்பார்கள். (இனிப் போய்) - இவள் அவ்விதம் ஸர்பபங்கள் போன்று செல்வதற்கு இடம் இல்லை, அவனே இவள் கண்ணழகில் ஈடுபட்டு வருவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இங்கு அவ்விதம் அல்லாமல், யார் செய்யவேண்டிய செயலை யார் செய்கிறார்கள்! அதாவது அவன் இவளைத் தேடி இங்கு வராமல், இவள் அங்கு செல்கிறாள். இப்படிப்பட்ட அழகான கண்களைக் கொண்டவள், தானாகவே அங்கு செல்பவளும் ஆனாள். இவ்விதம் செய்வதற்கு இவள் ஸ்வரூபமே காரணமாக உள்ளது.

வ்யாக்யானம் - (அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநனை) இவ்வளவே கிடீர் அவன் கண்ணுக்குத் தோற்றிருப்பது. ஒருபய விபூதி மாத்ரங் கிடீர் அவன் கண்ணுக்கு ஈடுபட்டிருப்பது; அவன் தன்னையும் தோற்பிக்கும் கண்ணிறே இவளது. அவன் அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநன்; இவள் நெடுங்கண் இளமான். அவன், தானும் தன் விபூதியும் இவள் கண்ணிலே ஒரு மூலையிலே அடங்கும்படியாயிருக்கை. கண்ணில் அல்லாத பரப்பும் இவள் பருவமும் குமர் கிடந்து போமத்தனை.

விளக்கம் – (அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநனை) - இவளுடைய கண்ணழகில் அனைத்து ஜகத்திற்கும் நாதனாக உள்ளவனும் கூட ஈடுபட்டிருப்பான் என்பதைக் கூறுவதற்குத் திருவுள்ளம் கொண்டவராக, இவளுடய கண்ணழகை விவரிக்கிறார்; இந்த அளவு மட்டுமே அவனுடைய கண்களுக்கு மற்றவர்கள் தோற்றுள்ளனர்; அதாவது நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி மட்டுமே அவன் கண்ணழகில் ஈடுபட்டு நிற்கிறது. அப்படிப்பட்ட அவனையும் கூடத் தோற்கடித்து, ஈடுபடும்படியாகக் கொள்வது இவ்ளுடைய கண்ணழகு அல்லவோ? அவனுடைய குறை மற்றும் இவளுடைய ஏற்றம் ஆகியவற்றைக் கூறுகிறார்; அவன் அனைத்து லோகங்களையும் கொண்ட அரவிந்தலோசநன்; இவள் நீண்ட கண்கள் கொண்ட இளமான் ஆவாள்; அவன், தானும் தனது விபூதிகளும், இவள் கண்களில் ஒரு மூலையில் மட்டுமே அடங்கும்படியாக இவளுடைய நீண்ட கண்கள் உள்ளன. இவை அனைத்தும் அவளுடைய கண்களின் ஒரு மூலையில் மட்டும் அடங்கிவிட்டால், எஞ்சிய இடங்கள் எவ்விதம் உள்ளன என்பதற்கு விடை அளிக்கிறார்; இவளுடைய கண்களில் உள்ள மற்ற இடங்களும், இவளுடைய பருவமும், குமர் போன்று அனுபவிக்கப்படாமல் பயனற்றுப் போகும்.

வ்யாக்யானம் - (தினைத்தனையும் விடாள்) நெகிழ்த்தணைக்கவும் பொறாள். இங்கிருந்து பட்ட க்லேசத்தாலே “நின்னைப் பிரியேன்" என்று சொல்லவும் நெஞ்சு கொடாள். காரியப்பாட்டாலே பிரியிலும் நெஞ்சொழிந்து கேட்கவேணுமே. (மனைக்கு வான் பழியும் நினையாள்) மனைக்கு வலிய பழியும் நினைக்கிறிலள். அபிமத ஸாதநம் அல்லாதவளவேயன்று, விரோதி என்றிருக்கிறாள். “இத்தலையாலே செல்லுமது பழி” என்றே யிருந்தபடி பாரீர்! “அத பாதக பீதஸ்த்வம் ஸர்வபாவேநபாரத”; அடுத்தடுத்து ராஜஸூயமே பண்ணிப் போந்தவனுக்கு ஒரு தடவற்பொய்க்காக நாக தர்சநம் பண்ணுமளவாய் நின்றவனையிறே

இப்படியுபதேசிக்கிறது. ஸத் கர்மத்தோடு அஸத் கர்மத்தோடு வாசியற விரோதியாய், க்ருஷ்ணனே அபாச்ரயம் என்னுமிடத்தைத் தோற்றுவிக்கிறது. “விமுக்தாந்ய ஸமாரம்ப:” அசேதநக் கிரியைகளைப் பற்றிக் கொண்டு நாலாதேகொள். “நாராயண பரோ பவ” உனக்கு வகுத்தவன் தன்னையே பற்றப் பார்.

விளக்கம் – (தினைத்தனையும் விடாள்) - இதற்கு “நெகிழ்த்து” மற்றும் “இங்கு” என்று தொடங்கி, இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். ஒரு க்ஷணமும் கூட விடமாட்டாள். நெருங்கி அணைப்பதையும் பொறாள்; இங்கிருந்து இவள் அடைந்த துன்பம் காரணமாக, உன்னைப் பிரியமாட்டேன்” என்று கூறவும் இடம் தரமாட்டாள். ஒரு தகுந்த காரியத்தைக் காரணத்தால் பிரிய நேரிட்டாலும் “இவ்விதம் பிரிதல் நல்லது” என்று இவளுடைய நெஞ்சத்திற்கு உணர்த்திய பின்னரே பிரியவேண்டும் என்பதால், தனது அனுபவத்தை விட்டுக்கொடுத்து, அந்தச் சொற்களைக் கேட்கமாட்டாள். (மனைக்கு வான் பழியும் நினையாள்) - தனது இடத்திற்கு உண்டாகவல்ல பெரும்பழியைக் கூட இவள் நினைக்கவில்லை. இப்படிப்பட்ட தனது முயற்சிகள், தனது விருப்பத்தை அடைவதற்கான ஸாதனங்களாக இருப்பதில்லை என்பது மட்டும் அல்லாமல், தடுத்தபடி உள்ள விரோதி என்றுள்ளாள். “இவள் மூலமாகக் கூறப்படுவதே பழி” என்று உள்ளதைக் காண்பீர்களாக. இவ்விதம் தான் செய்யும் முயற்சிகள் அனைத்தும் தனது ஸ்வரூபத்திற்கு விரோதம் என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; மஹாபாரதத்தில் தர்மனை நோக்கி தர்மதேவதை - அத பாதக பீதஸ்த்வம் ஸர்வபாவேநபாரத - சிறந்த ஒருவனுக்கு, ஒருமுறை பொய் கூறியதற்காக நரகத்தைக் காண்பித்தல் - என்றது காண்க. அதாவது அடுத்தடுத்து பலமுறை ராஜஸூய யாகம் நடத்தியவனாக, அச்வத்தாமா என்னும் யானை விஷயத்தில், ஒருமுறை மட்டும் பொய் கூறியதற்காக நரகதரிசனம் செய்தபடி நின்ற தர்மனைக் குறித்தே இவ்விதம் கூறப்பட்டது. அதாவது நற்செயல்கள் மற்றும் தீயசெயல்கள் போன்ற அனைத்தைப் பொறுத்தவரையிலும் வேறுபாடு ஆராயாமல், தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள ராஜஸூய யாகம் போன்றவற்றை நடத்துதல் என்பது ஆத்ம ஸ்வரூப விரோதியே ஆகும் என்பதையும், க்ருஷ்ணனே அனைத்து நிலைகளிலும் அண்டி நிற்கப்பட வேண்டியவன் என்பதையும் இந்த மஹாபாரதம் நிகழ்வு உணர்த்துகிறது; மேலும் அந்த வரியில் – விமுக்தாந்ய ஸமாரம்ப: - அசேதநமாக உள்ள செயல்களைப் பற்றியபடி, அவற்றின் பின்னே செல்லாமல் இருப்பாயாக -

என்றும், நாராயண பரோ பவ - நாராயணனே உனக்கு எஜமானன் என்பதால் அவனையே பற்றி நிற்பதற்கு முயல்வாயாக - என்றும் கூறப்பட்டது காண்க.

வ்யாக்யானம் - (செல்ல வைத்தனளே) போகையிலே நெஞ்சை வைத்தா ளென்னுதல், நமக்குமெல்லாங்காண அங்கேயானா ளென்னுதல். அதாவது தான் அங்கே செல்லவொருப் பட்டாளென்னுதல்; தான் மீளாதபடி புகுகையாலே நாம் அங்கே செல்லும்படி வைத்தாளென்னுதல்.

விளக்கம் - (செல்ல வைத்தனளே) - இங்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். முதலில், தான் அங்கு செல்வதற்குத் தனது நெஞ்சத்தை வைத்தாள் என்றும், இரண்டாவதாக இவளைத் தேடி நாம் அங்கு செல்வதற்குத் தனது நெஞ்சத்தை வைத்தாள் என்றும் கொள்ளலாம். அதாவது, தான் அங்கு செல்வதற்கு முழுமனதாக நின்றாள் என்று கூறலாம். அல்லது, இவள் இங்கு மீண்டும் திரும்பாத காரணத்தால், நாம் அங்கு செல்லும்படியாகச் செய்தாள் என்று கொள்ளலாம்.

6-7-11. வைத்த மா நிதியாம் மதுசூதனையே அலற்றி
கொத்து அலர் பொழில் சூழ் குருகூர்ச் சடகோபன் சொன்ன
பத்து நூற்றுள் இப்பத்து அவன் சேர் திருக்கோளூர்க்கே
சித்தம் வைத்து உரைப்பார் திகழ் பொன் உலகு ஆள்வாரே

பொருள் – சேமித்து வைத்த பெரும் நிதி போன்று, எப்போதும் அண்டத்தக்கபடி உள்ளவனும், மது என்ற அஸுரனை அழித்தவனும் ஆகியவனைக் குறித்து பூங்கொத்துக்கள் மலர்ந்தபடியான சோலைகளால் சூழப்பட்ட ஆழ்வார்திருநகரிக்கு எஜமானராகிய நம்மாழ்வார் அருளிச்செய்த பத்து நூறுகளில் உள்ள இந்தப் பத்து பாசுரங்களையும், அவன் எப்போதும் வசிக்கின்ற திருக்கோளூரில் நெஞ்சத்தை வைத்துக் கூறவல்லவர்கள், பகவத் அனுபவம் என்னும் ஒளி கொண்டதும், அனைவராலும் கொண்டாடத்தக்கதும் ஆகிய பரமபதத்தை, தாங்கள் எண்ணியபடி அடைவார்கள்.

அவதாரிகை - நிகமத்தில் இப்பத்தும் கற்றார் இட்டவழக்கு திருநாடு என்கிறார்.

விளக்கம் - இறுதியாக, இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்றவர்கள் பரமபதத்திற்குச் செல்வர் என்கிறார்.

வ்யாக்யானம் - (வைத்தமாநிதியாம்) இவள் தனிவழி போகைக்கும் தாயாரை விடுகைக்கும் ஹேதுவிருக்கிறபடி. தநம் சஞ்சிதமாயிருக்க, எடுத்தழித்துக் கெடுத்து ஜீவியாதே ஆறியிருப்பாரில்லையே. (வைத்தமாநிதி) "எய்ப்பினில் வைப்பினைக் காசினை மணியை" என்கிறபடியே தளர்ந்தார் தாவளமாய், எய்ப்பினில் வைப்பாய், "உண்டு" என்ன உயிர் நிற்கும்படியாய், உடையவன் காலிலே எல்லாரும் விழும்படியாய், உடையவனுக்கு அறவிட்டு ஜீவிக்கலாய், "அறவிட்டு ஜீவித்தான்" என்று ஏசாதபடியுமாய், அவன் தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதுமாய், உடையவனுக்கு ஒன்றுக்கும் கரைய வேண்டாதபடியாய், எல்லாம் தன்னைக் கொண்டே கொள்ளலாய், எல்லா ரஸங்களும் போகங்களும் தன்னைக் கொண்டே கொள்ளலாய், ஏவமாதி குணங்களை யுடைத்தா யிருக்கையைப் பற்ற நிதியென்கிறது. மாநிதியென்றது மஹார்க்கமான யென்றபடியாய், அத்தால், தன்னைக் கொண்டே எல்லாங் கொள்ளாநின்றால் தனக்கொரு குறை யற்றிருக்கை. அல்லாத நிதி மாண்டு நிற்குமே.

விளக்கம் – (வைத்தமாநிதியாம்) - இவள் தனியாக அங்கு சென்றதற்கும், தனது தாயாரை விட்டுச் சென்றதற்கும் காரணம் உள்ளது. அங்கு நிதி இருந்தால் இவ்விதம் செல்லவேண்டுமோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். செல்வம் நன்கு சேர்த்து வைக்கப்பட்டதாக விடை அருளிச்செய்கிறார்; செல்வம் நன்கு சேர்த்து வைக்கப்பட்டதாக உள்ளபோது, அதனை எடுத்து அழித்து, அதனைக் கெடுத்து வாழாமல், அதனை ஏதும் செய்யாமல் இருப்பவர்கள் யாரும் இல்லை. (வைத்தமாநிதி) - நிதி என்று கூறுவதன் காரணத்தைக் கூறுகிறார்; பெரியதிருமொழி (7-10-4) – எய்ப்பினில் வைப்பினைக் காசினை மணியை – என்பதற்கு ஏற்ப ஆபத்தில் உள்ளவர்களுக்கு ரக்ஷகமாகவும்; இளைத்தபடி உள்ளபோது பாதுகாப்பாகவும்; "செல்வம் உண்டு" என்று கூறினால் போன உயிரும் மீண்டு வருவது போன்று, "ஈச்வரன் உள்ளான்" என்றால், போகும் தன்மை கொண்ட ஆத்மாவின் இருப்பும் நினைக்கும்படியாகவும்; உடையவன் கால்களில் அனைவரும் விழும்படியாகவும்; ஆசார்யன் ஸர்வேச்வரனைக் குறித்து உபதேசிக்க, அதனைப் பெற்ற சிஷ்யன் தனது சக்திக்கு ஏற்ப செல்வம் அளிக்க, அதனைப் பெற்று வாழலாம்படியாகவும்; செல்வத்தை விற்று வாழும்படியாகவும்; "பிள்ளையை விற்று வாழ்கிறாள்" என்று கூறாதபடியாகவும்; செல்வம்

உள்ளவனுக்கு அந்தச் செல்வமானது தன்னைக் கொண்ட அவனுக்கு, யாருக்கும் அச்சம் கொள்ளவேண்டாம் என்பதான பெருமதிப்பு ஏற்படுத்துவது போன்று, ஸர்வேச்வரனும் தன்னை அடைந்தவர்களுக்கு யமன் போன்றவர்கள் குறித்து அச்சம் கொள்ளாத நிலையை ஏற்படுத்தும்படியாகவும்; அவனைச் செல்வமாகக் கொண்டவனுக்கு ஏதும் கரைய வேண்டாதபடியாகவும்; அனைத்தையும் தன்னைக் கொண்டே அடையலாம்படியாகவும்; அனைத்து இன்பங்கள் மற்றும் சுவைகள் ஆகியவற்றைத் தன்னை கொண்டே அடையலாம்படியாகவும்; இப்படிப்பட்ட பல தன்மைகள் கொண்டுள்ளதால் "நிதி" என்றார். "மாநிதி" என்று ஏன் கூறப்பட்டது என்றால், அழியாத நிதி என்பதால் ஆகும். அதாவது அனைத்தும் தன்னைக் கொண்டே அளித்தாலும், தனக்கு ஒரு குறைவும் இல்லாமல் இருத்தல். இவ்விதம் ஒரு தன்மை இல்லாத நிதியானது அழிந்துவிடும் அல்லவோ?

வ்யாக்யானம் - (மதுசூதனையே யலற்றி) இந்நிதியைக் காட்டுவதும் தானேயென்கிறது. உத்தேச்யமானதுதானே விரோதியையும் போக்கி யநுபவிப்பிக்கவற்றா யிருக்கை. (கொத்தலர் பொழில்) "ஸர்வஞ்ச குசலம் க்ருஹே" என்னுமாபோலே. ஸ்ரீபரதாழ்வான் பெருமாள் பக்கலிலே நெஞ்சை வைக்க வைக்க, அத்தைக் கண்டு "அவர்வரவணித்து" என்று திருவயோத்யை தளிரும் முறியுமானாற்போலே, விரஹத்தை யநுஸந்திக்க க்ஷமரல்லாதபடி அவன் பக்கலிலே ஏகாக்ர சித்தாரகையாலே பிறந்த தேற்றத்தாலே திருநகரியும் தளிரும் முறியுமானபடி. இத்தலையிலே யித்தனை த்வரையுண்டானால் அத்தலையில் பலத்துக்குக் கண்ணழிவுண்டோ? "அபிவ்ருக்ஷா:" என்கை தவிர்ந்து, "அகால பலிநோ வ்ருக்ஷா" என்னும்படியாயிற்று.

விளக்கம் - (மதுசூதனையே அலற்றி) - இந்த நிதியை, விரோதிகள் வராமல் காப்பாற்றி அனுபவிக்கும்படிச் செய்வதும், அந்த நிதியே என்கிறார். அடையப்படவேண்டிய ஒரு வஸ்துவானது, தானே, தன்னை அடையவிடாமல் தடுக்கும் விரோதியைப் போக்கி, தானே தன்னை அனுபவிக்கும்படிச் செய்யும் என்று கருத்து. (கொத்து அலர் பொழில்) - இவள் இவ்விதம் துக்கத்தால் தவித்தபடி உள்ளபோது, சோலையானது இவ்விதம் மலர்ந்து நிற்பது உண்டாகுமா என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; யுத்தகாண்டம் (127-50) - ஸர்வஞ்ச குசலம் க்ருஹே - வீட்டில் அனைவருமே நலமாக உள்ளனர் - என்பது போன்று, ஸ்ரீபரதாழ்வான் இராமனிடம் தனது நெஞ்சத்தை நிலை நிறுத்த, அதனைக் கண்டு, "இராமனுடைய

வரவானது அருகில் உள்ளது” என்று திருஅயோத்தியில் உள்ள தளிர்களும் கூட முறிந்தது போன்று, விரகத்தைப் பொறுத்து கொள்ள இயலாதபடி, அவனிடம் உள்ள ஒரு சிந்தனை காரணமாகப் பிறந்த தேற்றத்தால், ஆழ்வார்திருநகரியும் தளிர்களும் முறிந்தன. ஆனால் இவருக்குப் பிரிவாற்றாமை அதிகமானால், “அவனுடைய வருகை அருகில் வந்தது” என்று கூறுவது சரியோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; இவளுக்கு இந்த அளவிற்கு விரைவு ஏற்படும்போது, அவன் மூலமாக ஏற்பட உள்ள பலனுக்கு ஒரு குறை உள்ளதோ? அவனுடைய வருகை அருகில் வந்தால், “கொத்தலர் பொழில்” என்று மாறுவதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; அயோத்யாகாண்டம் (59-5) – அபிவ்ருக்ஷா: - மரங்களும் உலர்ந்தன - என்று நிலை மாறி, யுத்தகாண்டம் (127- 9) - அகால பலிநோ வ்ருக்ஷா - காலம் தகுந்தது இல்லை என்றாலும் மரங்கள் பழங்களை அளித்தன - என்று ஆயிற்று.

வ்யாக்யானம் - (பத்து நூற்றுள் இப்பத்து) கடலில் அம்ருதம் போலே, ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு இப்பத்து. (அவன் சேர் இத்யாதி) அவன் பொருந்தி வர்த்திக்கிற திருக்கோளூர்க்கே நெஞ்சை வைத்து. (உரைப்பார்) சொல்லுவார். (திகழ் பொன்னுலகாள்வாரே) ஒருத்தி கூப்பிட, ஒருத்தி தனியே போகையன்றிக்கே, நித்தியாநுபவம் பண்ணலாம் நிலத்திலே புகப் பெறுவர். தனிவழி போகாதே, அர்ச்சிராதிகணம் சேவிக்க விலக்ஷணமான தேசத்தே போய்ப் புகப் பெறுவர்.

விளக்கம் - (பத்து நூற்றுள் இப்பத்து) - கடலில் அமிர்தம் போன்று, ஆயிரத்தில் உள்ள இந்தப் பத்துப் பாசுரங்கள். (அவன் சேர் இத்யாதி) - அவன் பொருந்தி வாழ்கின்ற திருக்கோளூரில் நெஞ்சத்தை வைத்து. (உரைப்பார்) - கூறுபவர்கள். (திகழ் பொன் உலகு ஆள்வாரே) - ஒருவன் அழைக்க, ஒருவன் செல்லாமல், அவன் எப்போதும் வசிக்கும் இடத்திற்குச் செல்வர். தனிவழி செல்லாமல், அர்ச்சிராதி கணங்கள் வணங்கி நிற்க, மேன்மையான பரமபதத்தில் சேர்வர்.

திருவாய்மொழி ஆறாம் பத்து ஏழாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 3)

1-1-4. உறியை முற்றத்து உருட்டி நின்று ஆடுவார்
நறுநெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார்
செறி மென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்
அறிவு அழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே

பொருள் - திருவாயர்ப்பாடியில் உள்ள ஆயர்கள், நெய்யும் பாலும் தயிரும் இருக்கின்ற உறிகளை முற்றத்திற்குக் கொண்டு வந்து உருட்டி நின்று ஆடியும், நறுமணம் மிக்க நெய்யினையும் பாலினையும் தயிரினையும், “எங்கள் க்ருஷ்ணன் நலமாய் இருக்க வேண்டும்” என்று தானம் பண்ணியும், நெருங்கி மெத்தென்று இருக்கும் கூந்தல் அவிழும்படியாக நடனம் ஆடியும், இப்படியாக ப்ரீதி ஓங்க எங்கும், “எது செய்யவேண்டும், எது செய்யக்கூடாது” என்றெல்லாம் பிரித்துப் பார்க்க இயலாத நிலையினை அடைந்து திளைத்தார்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (உறியித்யாதி) உறியின் மேலே வைத்த நறுநெய்யும் பாலும் தயிரும் உடனே த்ரவ்ய கௌரவம் பாராதே அறுத்துக் கொண்டு போந்து முற்றத்திலே உருட்டி நின்றாடுவார். (நன்றாகத் தூவுவார்) க்ருத க்ஷீர தத்யாதிகளை "பிள்ளைக்கு நன்மையாக வேணும்" என்று தாநம் செய்வார். (செறிமென் கூந்தல விழத்திளைத்து) செறிந்து மெல்லிதான குழல்கள் கட்டவிழும்படி ஸ்த்ரிகள் புறப்பட்டு ஆடி லீலாபோகிகளாக. (எங்குமறிவழிந்தன ராய்ப்பாடி யாயரே) திருவாய்ப்பாடியில் திருவாயர் முழுக்க க்ருத்யாக்ருத்ய விவேக சூந்யரானார்களென்கிறார். "ஆய்ப்பாடி ஆயர்" என்றது, வளர்ப்பும் மேய்ப்புமன்றியே ஜாதி ஆயரென்றபடி.

மாமுனிகள் வ்யாக்யானம் - (உறியை முற்றத்துருட்டி நின்றாடுவார்) நறுவிதான நெய்யும் பாலும் தயிரும் இருக்கிற உறிகளை, த்ரவ்ய கௌரவம் பாராமல் அறுத்துக் கொடு வந்து ப்ரீதி பாரவச்யத்தாலே முற்றத்திலே உருட்டி நின்றாடுவார். (நறு நெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார்) க்ருத க்ஷீர தத்யாதிகளை "பிள்ளைக்கு நன்மை உண்டாகவேணும்" என்று தாநம் செய்வார். (செறிமென் கூந்தலவிழத் திளைத்து) செறிந்து மெத்தென்ற மயிர்முடி அவிழும்படி ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணி. (எங்குமறிவழிந்தனர் ஆய்ப்பாடியாயரே) திருவாய்ப்பாடியிலுள்ள கோபரானவர்கள் எங்குமொக்க உகவை தலை மண்டையிட்டு க்ருத்யாக்ருத்ய விவேக சூந்யரானார்கள். சிலர் உறியை முற்றத்துருட்டி நின்றாட, சிலர் நறு நெய் பால் தயிர் நன்றாகத் தூவ, சிலர் செறிமென் கூந்தலவிழத் திளைத்து, இப்படி ஆய்ப்பாடியாயர் எங்கும் அறிவழிந்தனரென்று க்ரியை.

விளக்கம் - (உறியை முற்றத்து உருட்டி நின்று ஆடுவார்) - நறுமணம் மிக்க நெய்யும் பாலும் தயிரும் இருக்கின்ற உறிகளை, அதில் உள்ள பண்டங்களின் சிறப்பினை ஏதும் பாராமல், அறுத்துக் கொண்டு வந்து, ப்ரீதி பரவசத்தாலே முற்றத்தில் உருட்டி நின்று ஆடுவார். (நறு நெய் பால் தயிர் நன்றாக தூவுவார்) – "எங்கள் பிள்ளைக்கு நன்மை உண்டாகவேண்டும்" என்று நறுமணம் மிக்க நெய்யினையும், பாலினையும், தயிரினையும், தானம் செய்வார். (செறிமென் கூந்தல் அவிழ்த்து திளைத்து) - திரண்டு மெத்தென இருக்கும் மயிர்முடிகள் அவிழும்படியாக நல்லதொரு பித்துப் பிடித்துப் பெண்கள் ஆடித் திளைப்பர். (எங்கும் அறிவு அழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே) - இப்படியாக ஆயர்ப்பாடியில்

உள்ள ஆயர்கள், எல்லா இடங்களிலும் ஒரே போன்று உகப்பு அடைந்து, இந்த உகப்பானது அதிகரிக்க, “எது செய்யவேண்டும் எது செய்யக்கூடாது”, என்றெல்லாம் ஆராய இயலா வண்ணம் விவேகம் அழியப்பட்டவர்களாக, சிலர் உறியை முற்றத்தில் உருட்டி நின்று ஆடியும், சிலர் நறு நெய் பால் தயிர் நன்றாக தானம் செய்தும், சிலர் நெருங்கிய மென்மையான கூந்தல்கள் அவிழத் திளைத்து ஆனார்கள்.

1-1-5. கொண்ட தாள் உறி கோலக் கொடு மழுத்
தண்டினர் பறியோலைச் சயனத்தர்
விண்ட முல்லை அரும்பு அன்ன பல்லினர்
அண்டர் மிண்டிப் புகுந்து நெய் ஆடினார்

பொருள் - வ்யாக்யானத்திலேயே அமைந்துள்ளது.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (கொண்டதாளித்யாதி) “தாள் கொண்ட” என்று, கால் நீண்ட உறிகளைத் தங்கள் கையிலே தூக்கி நின்றாடுவார். பரிசுண்டாய் கூரியதான மழுக்களையும், அளவுண்டாய் நன்றான தடிகளையும், மடலில் நின்றும் பறிக்கப்பட்ட ஒலையாலே கோத்துச் சமைக்கப்பட்ட சய்யையுமுடையராய்க் கொண்டு, முல்லையரும்பு விண்டாப்போலே யிருக்கிற பல்லு தோன்ற ஸரஸ விவாத கோலாஹலராய் நெருங்கிப் புகுந்து நெய்யாடினார் இடையரெல்லாருமென்கிறார். (விண்டின் முல்லை) என்று பாடமானபோது, “விண்டு” என்று குன்றாய், குன்றில் முல்லை நெருங்கப் பூத்தாப்போலே தோற்றுப் பல்லரென்னவுமாம். இடைக்கூத்தாடுவார்க்கு தோற்றுப் பல்லாயிறே யிருப்பது. அண்டர் என்று தேவஜாதிகளுக்கும் பேர்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (கொண்டதாளித்யாதி) கால் நெருக்கத்தை யுடைத்தான உறிகளையும், பரிசு உண்டாய்க் கூரியதான மழுக்களையும், ஜாத்யுசிதமான தடிகளையுமுடையராய், மடலில் நின்றும் பறிக்கப்பட்ட ஒலையாலே கோத்துச் சமைத்த சய்யையுமுடையராய்க் கொண்டு; ஹர்ஷம் தோற்ற ஸ்மிதம் பண்ணுகையாலே முல்லையரும்பு விண்டாப்போலே யிருக்கிற பல்லையுடையரான கோபரானவர்கள், நெருங்கிப் புகுந்து நெய்யாடலாடினார்களென்கை. (விண்டின் முல்லை) என்று பாடமானபோது, “விண்டு” என்று குன்றாய்,

குன்றின் முல்லை நெருங்கிப் பூத்தாற்போலே தோற்றுப் பல்லரென்னவுமாம். இடைக் கூத்தாடுவார் தோற்றுப் பல்லராயாயிற் றிருப்பது. அண்டர் - தேவரும், இடையரும்; இவ்விடத்தில் இடையரைச் சொல்லுகிறது.

விளக்கம் - (கொண்டதாளித்யாதி) - நீண்ட கயிற்றினைக்கொண்டு நெருக்கமாகப் பிண்ணப்பட்ட உறிகளையும், அழகு உண்டாகியுள்ள கூர்மையான கோடாலிகளையும், தங்கள் இனத்திற்குத் தகுந்ததான தடிகளையும், தாழம்பூ மடலிருந்து பறித்த ஒலைகளால் பின்னப்பட்ட படுக்கையினை உடையவராகவும், மகிழ்ச்சி தோன்ற புன்னகைச் செய்வதாலே, முல்லை மொட்டு விரிந்தது போலே இருக்கிற பல்லை உடையவராகவும் உள்ள ஆயர்கள், நெருக்கிப் புகுந்து நெய்யாடல் ஆடினார்கள். "விண்ட முல்லை" என்பது "விண்டின் முல்லை" என்று படிக்கப்பட்டால், "விண்டு" என்பது "குன்று" எனப் பொருள் தரும்; ஆக, குன்றின் முல்லை நெருங்கிப் பூத்தது போல் அந்த இடையர்களுடைய பற்கள் தோன்றின.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)

(பகுதி – 3)

தனியன்கள்

4. எம்பார் அருளிச் செய்தது

எங்கள் கதியே இராமாநுச முனியே
சங்கை கெடுத்து ஆண்ட தவராசா – பொங்கு புகழ்
மங்கையர்கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும்
தங்கும் மனம் நீ எனக்குத் தா

பொருள் - எங்களுக்கு கதியாக இருப்பவரும், "இராமானுச" என்னும் திருநாமத்தைக் கொண்டவரும், ஒருவனை எப்படி அவனுடைய ஆத்ம நிலையிலேயே நிலை நிற்க வைப்பது என்று எண்ணியபடியே இருப்பவரும், வேதசாஸ்திரங்களில் உள்ள ஐயங்களைப் போக்கியவரும், எல்லாரையும் அவரவருக்குத் தக்கதான அடிமை நிலைக்கு உயர வைத்து ஆள்பவரும், சரணாகதி

என்னும் தூய்மையான தவத்தின்படி வழி நடத்துபவரும், யதிகளுக்கு அரசரும் ஆகியவரே! மிகுந்த புகழை உடைய திருமங்கை நாட்டிற்கு அரசனான திருமங்கையாழ்வார் அருளிய வேதங்களான ஆயிரம் பாட்டுக்களையுடைய பெரியதிருமொழியையும், ஏனைய ஐந்து ப்ரபந்தங்களையும் தரித்திருக்கும்படியான மனதினை அடியேனுக்கு நீவிர் தந்தருளவேண்டும்.

அவதாரிகை - இனி, இவ்வாழ்வாரைப்போலே பாஹ்ய குத்ருஷ்டிகளை நிரஸித்து வைதிக மார்க்கத்தை நடத்தியும், உகந்தருளின நிலங்களை உத்தரித்தும், தத்ப்ரதிபாதகமான இவர் ஸ்ரீஸூக்தியை வர்த்திப்பித்தும் போருமவரிறே உடையவர்; அத்தைப் பற்ற, இவ்வாழ்வார் திவ்யஸூக்தியான திருமொழியாயிரமும் என் ஹ்ருதயத்திலே நிலை நிற்கும்படி உபகரித்தருள வேணுமென்று எம்பெருமானாரை அர்த்திக்கிறது இதில்.

விளக்கம் - எம்பார் அருளிச்செய்த இந்தத் தனியனில், திருமங்கையாழ்வாருடைய ஆயிரம் திருமொழிகளையும் தன் நெஞ்சிலே நிலைத்திருக்கும்படி உபதேசித்து அருளவேண்டும் என்று, தன்னுடைய குருவான இராமானுஜரை வேண்டுகிறார். இந்த ஆழ்வாரைப் போலே, ஆத்ம இயல்வான நிலைக்கு முரணாகவும், ஆத்ம இயல்வு நிலையிலிருந்து நழுவ வைத்து வெளியில் செல்ல வைக்கும் குறிப்புகளை உடைய மதங்களைக் களையறுத்தவர் இராமானுஜர் ஆவார். மேலும், வைதிக மார்கத்தை வழிநடத்தியும், ஸர்வேச்வரன் தான் உகந்து நிற்கும் திவ்யதேசங்களை சீரமைத்தும், அதற்கு உதவும் வகையில் உள்ள இந்த ஆழ்வாருடைய ப்ரபந்தங்களை நன்கு வளர்த்தும் வாழ்பவர் இராமானுஜர் ஆகிறார். இதனாலேயே எம்பார் இராமானுஜரைப் பற்றுகிறார்.

வ்யாக்யானம் - (எங்கள் கதியே) அகதிகளான வெங்களுக்குக் கதியா யிருக்கிறவரே! (இராமாநுச முனியே) சதுரக்ஷரியாய், மோக்ஷைக ஹேதுவான திருநாமத்தை யுடையருமாய், ஆத்மரக்ஷணத்திலே மநநம் பண்ணுமவரே! (சங்கை கெடுத்தாண்ட) "த்வதந்யஸ்ஸம்சயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே" என்றும், "தத்துவ நூல் கூழற்றது" என்னும்படி வேதாந்த சாஸ்த்ரத்தை நிஸ்ஸம்சயமாகப் பண்ணி மநஸ்ஸில் ஸம்சயங்களைப் போக்கி, எல்லாரையும் அடிமையாக ஆண்ட. (தவராசா) யதிராஜா! என்றபடி. அன்றிக்கே, தவம் என்று சரணாகதி தர்மமாய்,

அத்தை வர்த்திப்பிக்கிற ராஜா என்றுமாம். "தவநெறி"யிறே. (பொங்கு புகழித்யாதி) அதிஸம்ருத்தமான யசஸ்ஸையுடைய திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாருடைய, வேதரூபமாய் ஆயிரம் பாட்டாயிருக்கிற பெரியதிருமொழி ப்ரபந்தமெல்லாவற்றையும். அன்றிக்கே, (ஆயிரமனைத்தும்) என்று ஆயிரத்தையும், மற்றும் அவர் அனைத்து ப்ரபந்தத்தையும் என்றுமாம். (தங்கும் மனம் நீ யெனக்குத்தா) "கண்ண நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம்" என்கிற திவ்யஸூக்தியைத் தரிக்கும்படியான மநஸ்ஸைத் தந்தருள வேணும். "குறையல் பிரானடிக்கீழ்விள்ளாத வன்ப னிராமாநுசன்" என்றும், "நீலன்றனக்குலகிலினியான்" என்றும், "கலிமிக்க செந்நெற் கழனிக் குறையல் கலைப்பெருமானொலி மிக்க பாடலையுண்டு தன்னுள்ளந் தடித்து" என்றும், எம்பெருமானாரைச் சொல்லக் கடவதிறே; அத்தாலே அவரை அபேக்ஷிக்கிறது.

விளக்கம் - (எங்கள் கதியே) – [உடலையே ஆத்மா என்று மயங்கி] அகதிகளாக உள்ள எங்களுக்குக் கதியாக இருப்பவரே! (இராமாநுச முனியே) - "இராமானுச" என்னும் நான்கு எழுத்து உடையவராய், மோக்ஷத்திற்குக் காரணமான திருநாமத்தை உடையவருமாய், "ஆத்ம நிலையில் எப்படி இவனை நிலை நிற்க வைப்பது" என்று எண்ணியே இருப்பவரே! (சங்கை கெடுத்து ஆண்ட) - கீதை (6-39) - த்வதந்யஸ்ஸம்சயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே - க்ருஷ்ணா! என்னுடைய ஐயத்தை முற்றிலுமாகப் போக்கடிப்பாயாக; இந்த ஐயத்தைப் போக்கடிக்கக் கூடியவனாக உன்னைத் தவிர வேறு ஒருவன் தகுதி பெற்றிருக்கவில்லை" என்று அர்ஜுனன் கூறியது போன்றும், இராமாநுச நூற்றந்தாதி (65) - தத்துவ நூல் கூழ் அற்றது - என்று கூறியது போன்றும், வேதாந்த சாஸ்திரங்கள் மேல் திணித்த சந்தேகங்களை நீக்கி, மனத்தில் உள்ள சந்தேகங்களைப் போக்கி, அனைவரையும் அவரவர் இயல்வான அடிமை நிலைக்கு ஆண்டு கொண்டு போகின்ற. (தவராசா) – யதிராஜா! அல்லது, "தவம்" என்பது சரணாகதி தர்மத்தைக் குறிப்பதாகக் கொண்டு, அதனை வளர்க்கும் ராஜா!. ஆனால் "தவம்" என்பது இவ்விதம் பொருள் தருமோ என்பதற்கு ப்ரமாணம், பெரியதிருமொழி (5-6-7) - சிந்தனையைத் தவநெறியை – என்பதாகும். (பொங்கு புகழ் இத்யாதி) - மிகுந்த கீர்த்தியை உடைய திருமங்கை நாட்டிற்கு அரசனான ஆழ்வார் அருளிச்செய்ததும், தமிழ் வேதங்களாய் உள்ளதும், ஆயிரம் பாட்டுக்களைக் கொண்டதுமான பெரியதிருமொழி எனப்படும் ப்ரபந்தம்

அனைத்தையும்; அல்லது (ஆயிரம் அனைத்தும்) - ஆயிரத்தையும், மற்றும் உள்ள ஐந்து ப்ரபந்தங்களையும் என்றும் கூறலாம். (தங்கும் மனம் நீ எனக்குத் தா) - பெரியதிருமொழி (7-10-10) - கண்ண நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் – என்று, திருக்கண்ணமங்கையுள் நிற்கும் கண்ணனும் ஆசைப்படும் பெரியதிருமொழியைத் தரித்து, [அதற்குத்தக நிற்கும்படியான] மனத்தினைத் தந்து அருள வேண்டும். இராமானுச நூற்றந்தாதி (2) - குறையல் பிரான் அடிக்கீழ் விள்ளாத அன்பன் இராமானுசன் - என்றும், இராமாநுச நூற்றந்தாதி (17) - நீலன் தனக்கு உலகில் இனியான்" என்றும், இராமாநுச நூற்றந்தாதி (85) – கலி மிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப்பெருமான் ஒலிமிக்க பாடலை உண்டு தன் உள்ளம் தடித்த - என்றும் சொல்லுகிறபடி, எம்பெருமானார் மீது திருமங்கையாழ்வாருக்கும், ஆழ்வார் மீது எம்பெருமானாருக்கும் ப்ரீதி அதிகம் உள்ளது அன்றோ. இதனால் இவரை வேண்டி நிற்கிறார் எம்பார்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்